# ரத்ததான முகாம்

ஊத்தங்கரை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 23.06.2023 அன்று ரத்ததான முகாம் நடைபெற்றது. கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் தியாகராஜன் அவர்கள் வரவேற்றார். கல்லூரி முதல்வர் திருமதி எப்சிபா ஏஞ்சலா துரைராஜ் அவர்கள் ரத்ததான முகாமை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஊத்தங்கரை வட்டாட்சியர் திரு திருமலை ராஜன், கௌரவ விருந்தினராக ஊத்தங்கரை செஞ்சிலுவை சங்க தலைவர் மருத்துவர் தேவராசு, நேசம் தொண்டு நிறுவன அறங்காவலர் குணசேகரன், கல்லூரி துணை முதல்வர் விஜயன் செஞ்சிலுவை சங்க அலுவலர் சதீஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமில் 60க்கும் மேற்பட்ட மாணவர்கள் ரத்ததானம் வழங்கினர். நிறைவாக இளைஞர் செஞ்சிலுவை சங்க அலுவலர் லோகேஷ் குமார் அவர்கள் நன்றி பாராட்டினார்.






# கல்லூரியில் ரத்த தான முகாம்

**ஊத்தங்கரை, ஜூன் 24:** ஊத்தங்கரை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில், ரத்த தான முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமில் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் தியாகராஜன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் எப்சிபா ஏஞ்சலா துரைராஜ் தலைமை வகித்து, ரத்த தான முகாமை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஊத்தங்கரை வட்டாட்சியர் திருமலைராஜன், ஊத்தங்கரை இளம் செஞ்சிலுவை சங்கத் தலைவர் மருத்துவர் தேவராசு, நேசம் தொண்டு நிறுவன நிறுவனர் குணசேகரன், கல்லூரி துணை முதல்வர் விஜயன், ஹோட்டல் சங்கத் தலைவர் ஆர். கே.ராஜா, சதீஷ்குமார், ரஜினிசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முகாமில் 60 மாணவர்கள் ரத்த தானம் செய்தனர். தானம் பெறப்பட்ட ரத்தம் கிருஷ்ணகிரி தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இளம் செஞ்சிலுவை சங்க அலுவலர் லோகேஷ் குமார் நன்றி கூறினார்.

# அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் ரத்ததான முகாம்

**ஊத்தங்கரை, ஜூன் 24-**

ஊத்தங்கரை,, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில், ரத்ததான முகாம் நடந்தது.

கல்லூரி என்.எஸ்.எஸ்., அலுவலர் தியாகராஜன் வரவேற்றார். முதல்வர் எப்சிபா ஏஞ்சலா துரைராஜ், ரத்ததான முகாமை துவக்கி வைத்தார். ஊத்தங்கரை தாசில்தார் திருமலைராஜன், ஊத்தங்கரை ரெட்கிராஸ் சங்க தலைவர் டாக்டர் தேவராசு, நேசம் தொண்டு நிறுவன நிறுவனர் குணசேகரன், கல்லூரி துணை முதல்வர் விஜயன், ரெட்கிராஸ் நிர்வாகிகள் ராஜா, சதிஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். 60 மாணவர்கள் ரத்ததானம் வழங்கினர். பெறப்பட்ட ரத்தம் கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ரெட்கிராஸ் சங்க அலுவலர் லோகேஷ்குமார் நன்றி கூறினார்.



ஊத்தங்கரை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில், ரத்ததான முகாம் நடந்தது.